මූල්‍ය බුද්ධි ඒකකය
நிதியியல் உளவறிதல் பிரிவு
FINANCIAL INTELLIGENCE UNIT

# நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் தொடர்பிலான கடப்பாடுகள்

2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு 7 உடன் சேர்த்து வாசிக்கப்படும் விதத்தில் 29ஆம் பிரிவின் கீழ், 2017ஆம் ஆண்டு ஏப்பிறல் 21ஆம் திகதியிடப்பட்ட இல.2015/56 கொண்ட அதிவிசேட வர்த்தமானி, நிதியமைச்சரினால் விடுக்கப்பட்ட அறிவித்தல், நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 33ஆம் பிரிவின் கீழ் வரைவிலக்கணம் செய்யப்பட்ட நிறுவனங்களினால் பின்பற்றப்படவேண்டிய “சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் (படிவம்)” களை விபரிக்கின்றது.

இவ்வறிவித்தலின் நோக்கம் யாதெனில், கீழ்வரும் குறித்துரைக்கப்பட்ட நிதியியல் அல்லா வியாபாரங்கள் நிதியியல் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுகையில், நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு 33இல் குறிப்பிடப்பட்டவாறு, ஏதேனும் சட்டத்திற்கு முரணான நடவடிக்கைகள்/ குற்றவியல் குற்றங்கள் போன்றவற்றுடன் தொடர்புடைய சந்தேகப்படும்விதத்தில் தகுந்த காரணங்கள் காணப்படுமிடத்து ஏதேனும் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுவதற்கான அவர்களின் கடப்பாடுகளை அறியத்தருவதேயாகும்.

(அ) தனியாள் அல்லது கூட்டமைப்பு முகாமைத்துவத்தையும்;

(ஆ) வேறு ஆட்களின் சார்பில் நிதியை அல்லது பணத்தை முதலீடு செய்தல், நிர்வகித்தல் அல்லது முகாமை செய்தல் என்பதையும்;

(இ) வேறு ஆட்கள் சார்பில் காசை அல்லது திரவப்பிணையங்களைப் பாதுகாப்பாக வைத்திருத்தலையும் நிர்வகித்தலையும்;

(ஈ) பாதுகாப்பு கட்டுக்காப்புச் சேவைகளையும்;

(ஊ) நம்பிக்கைப் பொறுப்பு நிர்வாகம் அல்லது முதலீட்டு முகாமைத்துவம் அல்லது மூப்போய்வு உதவு தொகைத்திட்டம்;

(எ) கசினோக்கள், சூதாட்ட இல்லங்கள் அல்லது லொத்தர் ஒன்றை நடாத்துதல், தங்கள் வாடிக்கையாளர்கள் விதித்துரைக்கப்பட்ட தொடக்க நிலைக்குச் சமமான அல்லது அதற்கு மேற்பட்ட கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடும்போது, இணையத்தின் ஊடாக அத்தகைய தொழிலைக் கொண்டு நடாத்தும் ஆளொருவர் உட்பட;

(ஏ) ஆதன முகவர்கள், அவர்கள் ஆதனங்களின் கொள்வனவு மற்றும் விற்பனை தொடர்பில் தங்கள் வாடிக்கையாளர்களுக்காக கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடும்பொழுது;

(ஐ) விலையுயர்ந்த உலோகங்களின் வியாபாரிகளும் விலையுயர்ந்த கற்களிலும் ஒரளவு விலையுயர்ந்த கற்களிலும் வியாபாரம் செய்பவர்கள், அவர்கள் விதித்துரைக்கப்பட்ட தொடக்க நிலைக்குச் சமமான அல்லது அதற்கு மேற்பட்ட காசுக் கொடுக்கல்வாங்கலில் வாடிக்கையாளருடன் ஈடுபட்டிருக்கும்போது 1993ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, இரத்தினக்கற்கள், ஆபரணங்கள் சட்டத்தினால் மேவப்பட்ட உலோகங்களும் கற்களும் உட்பட ஆனால் அவற்றிற்கு மட்டுப்படுத்தப்படாமல்;

(ஒ) நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் 33ஆம் பிரிவில் வரையறுக்கப்பட்டவாறான சட்டவாளர்கள், நொத்தாரிசுகள் ஏனைய சுயாதீனமான சட்ட வல்லுநர்கள் மற்றும் கணக்காளர்கள்;

(ஓ) நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் 33ஆம் பிரிவில் வரையறுக்கப்பட்டவாறான நம்பிக்கைப் பொறுப்பு அல்லது கம்பனி பணிகளை வழங்குவோர்;

(ஔ) ஏனைய எழுதப்பட்ட சட்டங்களில் வழங்கப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் படியான கரைகடந்த பிரிவுகள்.

இதன்படி, குறித்துரைக்கப்பட்ட நிதியியல்லா வியாபாரங்கள், நிதியியல் உளவறிதல் பிரிவுக்கு ஏதேனும் சந்தேகத்துக்குரிய கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுவதற்கு மேற்கூறப்பட்ட வர்த்தமானியின் அட்டவணை V இனை பயன்படுத்துமாறு ஆலோசனை வழங்கப்படுகிறது.

**பணிப்பாளர், நிதியியல் உளவறிதல் பிரிவு**
**இலங்கை மத்திய வங்கி**
**இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01**

☎ 011-2477125 🖷 011-2477692/2477722 @ str@fiusrilanka.gov.lk